செ.வெ.எண்: 23 நாள்: 07.01.2022

## கடலூர் மாவட்டம்

**சிறுபான்மையினர் தையல் இயந்திரம் இலவசமாக பெறலாம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கி.பாலசுப்ரமணியம்,இஆப.,அவர்கள் தகவல்.**

---------

கடலூர் மாவட்டத்திலுள்ள இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தினர், பார்சிகள் மற்றும் சமணர்கள் சமூகத்தைச் சேர்ந்த மக்களின் பொருளாதார நிலையில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்காகவும், அவர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்தவும் இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரம் பெறுவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**தகுதிகள்**

- சிறுபான்மையினராக இருத்தல் வேண்டும்
- தையல் கலை பயின்றவராக இருத்தல் வேண்டும்
- ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ. 1.00 இலட்சத்துக்குள் இருத்தல் வேண்டும்
- வயது வரம்பு 20 முதல் 45 வயது வரை இருத்தல் வேண்டும்
- கைம்பெண் மற்றும் கணவரால் கைவிடப்பட்டவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்

**சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

- சிறுபான்மையினர் என்பதற்கு ஆதாரமான சான்று
- வருமான சான்று
- தையல் பயிற்சி பெற்றதற்கான சான்று
- ஆதார் அடையாள அட்டை நகல்
- குடும்ப அட்டை நகல்
- புகைப்படம் (3)

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் தகுதியுள்ள சிறுபான்மையினர் கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் தபால் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

---

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர்.**